<u>குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவையாறு.</u>

<u>CC. No. 460/2025</u>

2026–ம் ஆண்டு மார்ச் மாதம் 11–ம் நாள் புதன்கிழமை அரசு தரப்பு சாட்சி– 5(PW–5)**–ன் வாக்குமூலம்** (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின்படி) **திருமதி.A.பத்மபிரியா மூன்றாம் நிலை எழுத்தர்** அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | **புஷ்பம்** | தொழில் | | **தபால் துறை அலுவலர் (ஓய்வு)** |
| க/பெ. | : | **பராமனந்தம்** | ஊர் | | **பேராவூரணி** |
| வயது | : | 73 | மாவட்டம் | | **தஞ்சாவூர்** |

**<u>11.03.2026</u>**

**<u>எதிரி நீதிமன்ற காவலில் உள்ளார். வழக்கறிஞர் ஆஜர்.</u>**

**<u>முதல் விசாரணை:</u>**

1) நான் பேராவூரணியில் வசித்து வருகிறேன். கடந்த 27.10.2017 ஆம் தேதி நான் எனது அலுவலகத்திற்கு செல்வதற்காக சாத்தனூர் பேருந்து நிறுத்ததில் இறங்கி நடந்து சென்றுக்கொண்டிருந்தேன். யாரோ இருவர் இருச்சக்கர வாகத்தில் வந்தார்கள். என் மீது வண்டி மோதிவிடக்கூடாது என ரோட்டின் ஓராமக சென்றேன். அவர்கள் என்னை சுற்றி வந்து எனக்கு முன்னால் வண்டியை நிறுத்தி School எங்கு உள்ளது என்று கேட்டார்கள். நான் எனது கையை நீட்டி அங்கு உள்ளது என்று காண்பித்தபோது இருச்சக்கர வாகனத்தில் பின்புறம் அமர்ந்திருந்த நபர் நான் எனது கழுத்தில் அணிந்திருந்த 3 1/2 பவுன் தங்கச் செயினை அறுத்து சென்றுவிட்டார்கள்.

2) அவர்கள் யார் என்று எனக்கு தெரியவில்லை. அங்கு வேறுயாரும் இல்லை நான் அழுதுக்கொண்டு அருகில் உள்ள தெருவிற்கு சென்று செயின் அறுத்த விபரத்தை அங்கு இருந்தவர்களிடம் சொன்னேன். அவர்கள் இருவரும் திருக்காட்டுப்பள்ளியை நோக்கி சென்றார்கள் என்றும் சொன்னேன். அந்த இருவரும் முகத்தை மறைத்து கட்டியிருந்தார்கள். அதன் பிறகு அங்கு இருந்தவர்களும் நானும் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தோம் என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையது. அது நான் கொடுத்ததுதான் (புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது).

3) அதன் பிறகு சிறிது நாட்கள் கழித்து காவல் நிலையத்தில் சொன்னதன் பேரில் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்து தங்க காயினை பெற்றுக்கொண்டேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :** இல்லை என பிரதிநிதித்துவம் செய்யப்பட்டதன் பேரில் குறுக்கு விசாரணை முடித்து வைக்கப்படுகிறது.

**மறுவிசாரணை –** இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் எதிரிகள் முன்னிலையில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் சொல்லப்பட்டு உடனுக்குடன் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு சாட்சியால் சரியாக உள்ளது என ஒப்புக்கொள்ளப்பட்டது.

ஒம்./–எஸ்.ஆக்னஸ் ஜெப கிருபா,
நீதித்துறை நடுவர்,
திருவையாறு.

<u>குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவையாறு.</u>

<u>CC. No. 460/2025</u>

2026–ம் ஆண்டு மார்ச் மாதம் 11–ம் நாள் புதன்கிழமை அரசு தரப்பு சாட்சி–6 (PW–6)**–ன் வாக்குமூலம்** (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின்படி) **திருமதி.A.பத்மபிரியா மூன்றாம் நிலை எழுத்தர்** அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | **முருகதாஸ்** | தொழில் | | **உதவி ஆய்வாளர்** |
| த/பெ. | : | **மாரிமுத்து** | **ஊர்** | | **மருவூர் காவல் நிலையம்** |
| வயது | : | 54 | மாவட்டம் | | **தஞ்சாவூர்** |

**<u>11.03.2026</u>**

**<u>எதிரி நீதிமன்ற காவலில் உள்ளார்.</u>**

**<u>முதல் விசாரணை:</u>**

நான் தற்போது மருவூர் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியில் இருந்து வருகிறேன். இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரிகளான சிறப்பு உதவி ஆய்வாளர் பாரகிருஷ்ணன் மற்றும் ஆய்வாளர் சிவராஜ் என்பவரை எனக்குத் தெரியும். ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன்.

2) கடந்த27.10.2017 ஆம் தேதியன்று 19 மணியளவில் மருவூர் காவல் நிலைய சிறப்பு உதவி ஆய்வாளராக பாலகிருஷ்ணன் நிலைய பொறுப்பில் இருந்தபோது, தஞ்சாவூர் EP காலனி புஷ்பம் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரை பெற்று, அதன் தன்மைக்கேற்ப காவல் நிலைய குற்ற எண்.116/2017, ச/பி.392 இதச வின் கீழ் வழக்கு பதிவுசெய்துள்ளார். ( **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ–4 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** முதல் தகவல் அறிக்கையின் அசலை வாதியின் புகாருடன் இணைத்து நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளார். வழக்கு கோப்புகளை மேல் நடவடிக்கைகாக ஆய்வாளர் வசம் ஒப்படைத்துள்ளார்.

3) அன்றையதினமே ஆய்வாளர் வழக்கினை புலன் விசாரணனைக்கு எடுத்துக்கொண்டு 20.30 மணிக்கு சம்பவம் இடத்திற்கு சென்று சாத்துனூர் பால்வாடி பள்ளிக்கூடம் அருகே சாட்சிகள் ராஜீ மற்றும் குணசேகரன் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செயது சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றுள்ளார். **(பார்வை மகசர் அ.சா.ஆ.5 ஆகவும் . மாதிரி வரைபடம் அ.சா.ஆ.6 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.)** பட்டியல் சாட்சிகள் 1 முதல் 4 மற்றும் மகஜர் சாட்சிகள் தனிதனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார்.

4) சம்பவம் உண்மையென தெரியவர எதிரிகளை தேடிவந்த நிலையையில், 12.11.2017 ஆம் தேதி காலை 10.00 மணியளவில் தில்லைஸ்தானம் பஸ்டாப் அருகே வாகன தனிக்கை செய்துகொண்டிருந்த போது ஊதா நிற பஜாஜ் டிஸ்கவர் இருசக்கர வாகனத்தில் வந்த எதிரிகள்

ஜீவகர்ணா (எ) முகமது சமீர், த/பெ சந்திரசேகர் என்பவரும் செந்தில்நாதன் த/பெ மாரியப்பன் என்பரும் வந்த போது அவர்களை விசாரணை செய்தபோது எதிரி ஜீவகர்ணா தாமக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள் ஜீவனந்தம் மற்றும் திருமூர்த்தி ஆகியோர் முன்னிலையில் பதிவு செய்துள்ளார் அதன் அடிப்படையில் அவரிடம் இருந்து 5 பவுன் எடையுள்ள செயின் 1 மற்றும் TN 68 H 6649 என்ற எண் கொண்ட பஜாஜ் டிஸ்கர் ஊதா நிற இருசக்கர வாகனம் ஒன்றையும் சாட்சிகள் முன்னிலையில் மகஜரில் கைப்பற்றி படிவம் 91ன் மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளார். **(கைப்பற்றுதல் மகஜர் அ.சா்ஆ.7 ஆகவும் படிவம் 91 அ.சா.ஆ.8 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.)**

5) எதிரிகள் இருவரையும் நீதிமன்ற காவலுக்கு அனுப்பிவைத்துள்ளார். முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த உதவி ஆய்வாளரை விசாரித்து, இத்துடன் வழக்கின் புலன் விசாரணை முடித்து 15.11.2017ஆம் தேதி எதிரிகளுக்கு எதிராக குற்ற இறுதி அறிக்கை தயார் செய்து தாக்கல் செய்துள்ளார்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

வழக்கு சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றும், சொன்ன தேதியில், சொன்னயிடத்தில் எதிரிகளை கைது செய்யவில்லை என்றும் புள்ளி விபர கணக்கிற்காக பொய் புகார் பெற்று உரிய புலண் விசாரணை செய்யாமல் எதிரிகளுக்கு எதிராக வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும் புலன் விசாரணை அதிகாரிக்கு ஆதரவாக நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

<u>மறுவிசாரணை – இல்லை.</u>

திறந்த நீதிமன்றத்தில் எதிரிகள் முன்னிலையில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் சொல்லப்பட்டு உடனுக்குடன் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு சாட்சியால் சரியாக உள்ளது என ஒப்புக்கொள்ளப்பட்டது.

ஒம்./–எஸ்.ஆக்னஸ் ஜெப கிருபா,
நீதித்துறை நடுவர்,
திருவையாறு.